குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 50/2015

அ.சா. **1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. சிவலிங்கம் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. ஸ்ரீராமலு |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 43 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது**. 04.02.2025**

**(1, 2, 4** முதல் **8** வரையிலான எதிரிகள் ஆஜர்**)**

**(3**ம் எதிரி ஆஜரில்லை**.** கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317**ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**).**

முதல் விசாரணை தொடர்ச்சி :

**2)** இவ்வழக்கில் களவு போயிருந்த 165 இரும்பு சென்ட்ரிங் சீட்களை காவல் துறையினர் நீதிமன்றத்தில் ஒப்புவித்து C.P.No.13/2015 வழங்கப்பட்டது. பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து மேற்படி வழக்குச் சொத்தினை இடைக்கால பொருப்பில் பெற்றுக்கொண்டேன். இது சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றனர்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை **:**

**1)** நான் பனிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் மொழியில் எழுதப்படிக்கத்

தெரியும். அ.சா.ஆ.1 – புகார் மனுவினை எனது கைப்பட எழுதி காவல் நிலையத்தில் தாக்கல் செய்தேன். அ.சா.ஆ.1 – புகார் மனுவினை கடந்த 12.01.2015ம் தேதியன்று காவல் நிலையத்தில் அளித்தேன். வழக்கு களவுச் சம்பவத்தில் களவு போனது மொத்தம் 165 சென்ட்ரிங் இரும்பு சீட்கள் ஆகும்.நானும் என்னுடன் சேர்ந்து 4-5 நபர்களும் மேற்படி சென்ட்ரிங் சீட்களை வண்டியிலிருந்து இறக்கிவைத்தோம். என்னுடன் திரு.குமரவேல், திரு.ரவி மேலும் இரண்டு நபர்கள் மேற்படி பணி செய்தனர். ஒவ்வொரு சென்ட்ரிங் இரும்பு சீட்டும் தலா 13 – 14 கிலோ எடை இருக்கும். 11.01.2015ம் தேதியன்று மாலை சுமார் 04.00 மணியளவில் மேற்குறிப்பிட்ட 165 சென்ட்ரிங் இரும்பு சீட்டுகளை இறக்கிவைத்தோம், மறுநாள் காலை சுமார் 09.30 மணிக்கு மேல் வந்து பார்த்தபோது, மேற்படி சென்ட்ரிங் இரும்பு சீட்டுகள் காணாமல் போயிருந்தது.

2) புக்கசாகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில்தான் மேற்படி சென்ட்ரிங் இரும்பு சீட்டுகளை இறக்கி வைத்திருந்தோம். நாங்கள் மறுநாள் காலை வந்து பார்த்தபோது பள்ளி தொடங்கியிருந்தது, ஆகவே பூட்டு உடைக்கப்பட்டிருந்ததாக என்று எனக்குத் தெரியாது. மேற்படி பள்ளியானது அரசு பள்ளி என்ற காரணத்தினால் பாதுகாவலர்கள் இருந்தனரா என்றால் அது குறித்து எனக்கு சரியாகத் தெரியாது. அ.சா.ஆ.1 – புகார் மனுவில் அடையாளம் தெரியாத நபர்கள்தான் மேற்படி இரும்பு சீட்டுகளை திருடியதாக விவரம் தெரிவித்துள்ளேன் என்றாலும், எதிரிகள் தான் திருடியதாக குறிப்பிட்டுத் தெரிவிக்கவில்லையென்றாலும் சரிதான். அ.சா.ஆ.1 – புகார் மனுவில் புகார் அளித்த நேரத்தை குறிப்பிடவில்லையென்றால் சரிதான். வழக்கு களவுச் சம்பவம் குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும், ஆகவே தான் யாரோ திருடியதாக விவரம் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கு களவுச் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லையென்றாலும், அவ்வாறு தொடர்பு இருந்தால் அவர்களுடைய பெயர்களை நான் குறிப்பிட்டு தெரிவித்திருப்பேன் என்றாலும் அது குறித்து எனக்குத் தெரியாது.

3) எனது மறு வாக்குமூலத்தில் நான் அக்கம் பக்கத்தில் தேடி மேற்படி சென்ட்ரிங் சீட்டுகளை கண்டறிய இயலவில்லை என்ற விவரத்தினை தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. சுமார் 10 நாட்கள் கழித்து 165 சென்ட்ரிங் இரும்பு சீட்டுகளை காவல் துறையினர் கைப்பற்றினர். மேற்படி விவரத்தினை காவல் துறையினர் எனக்கு தெரிவித்தனர். பேரிகை காவல் துறையினர் தெரிவித்த பின்தான் மேற்படி சென்ட்ரிங் சீட்களைப் பார்த்தேன். கைப்பற்றப்பட்ட சென்ட்ரிங் சீட்டுகள் 2 x 3 அளவு இருக்கும், அதனடிப்படையில் நாங்கள் அடையாளம் கண்டுகொண்டோம். வழக்கு களவு சம்பவத்தை நான் நேரில்

பார்க்கவில்லையென்றாலும், காவல் துறையினர்தான் அவ்விவரத்தினை தெரிவித்தனர் என்றால் சரிதான். எதிரிகளுக்கும் வழக்கு களவுச் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லையென்றால்ம் எதிரிகள் மீது பொய் புகார்அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

ஓம்/-வ.அகவிதன்,
குற்றைவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்.